தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை




# மதிப்பீட்டுக் குழு

## 2016 – 2018

(பதினைந்தாவது பேரவை)

## 1 முதல் 3 வரையிலான அறிக்கைகள்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

# மதிப்பீட்டுக் குழு
# (2016 – 2018)

(பதினைந்தாவது பேரவை)

## முதலாவது அறிக்கை

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு" குறித்து 2006–2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த பதினான்காவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 18 JUL 2017 )

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

# மதிப்பீட்டுக் குழு
# (2016 – 2018)

(பதினைந்தாவது பேரவை)

## முதலாவது அறிக்கை

**"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு" குறித்து 2006–2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த பதினான்காவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.**

# பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2016–2018) | ... | iii |
| பாகம்–1 முன்னுரை | ... | v |
| பாகம்–2 "இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு" குறித்து 2006–2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த பதினான்காவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை | ... | 1–3 |


## இணைப்புகள்


| | | |
|---|---|---|
| இணைப்பு – 1 | துறையால் நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள் | 5–19 |
| இணைப்பு – 2 | பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றவை | 21–33 |
| இணைப்பு – 3 | துறையிடமிருந்து பதில் வாப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப் பெற வேண்டிய பரிந்துரைகள் | 35–46 |


TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மதிப்பீட்டுக் குழு (2016–2018)
## (பதினைந்தாவது பேரவை)

(2017–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

***தலைவர்***

1. திரு. பி.எம். நரசிம்மன்

***உறுப்பினர்கள்***

#2. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்
மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்
(அலுவல் காரணமாக)

3. திரு. கரி. இராமசாமி
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

4. டாக்டர் எஸ். முத்தையா
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திரு. எஸ்.ஆர். இராஜா

6. திரு. ஆர். கனகராஜ்

7. திரு. இரா. குமரகுரு

8. திரு. அர. சக்கரபாணி

9. திரு. கே.பி.பி. சாமி

10. திரு. எஸ். சுதர்சனம்

11. திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்

12. திரு. தங்கம் தென்னரசு

13. திரு. ஏ.பி. நந்தகுமார்

14. டாக்டர் V.P.B. பரமசிவம்

15. திரு. கே.பி.பி. பாஸ்கர்

16. திருமதி ப. மனோன்மணி

17. திரு. வி.வி. ராஜன் செல்லப்பா

18. திரு. செ. ராஜேஷ் குமார்

19. திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

***செயலகம்***

திரு. க. பூபதி . . செயலாளர் (பொறுப்பு)

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. கு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

*# 23.2.2017 முதல்*

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மதிப்பீட்டுக் குழு (2016–2018)

## பாகம் – 1

## முன்னுரை

மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக இந்த அறிக்கை பேரவைக்கு அளிக்கப்படுகிறது.

2. இவ்வறிக்கை "இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு" குறித்து 2006–2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) 4.5.2007 ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த பதினான்காவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்து அளிக்கப்பெறும் அறிக்கையாகும்.

3. 2016–2017 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 1.2.2017 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது. 24.3.2017 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி மதிப்பீட்டுக் குழுவின் பதவிக்காலம் 31.3.2018 வரை நீட்டிக்கப்பெற்றது.

4. குழு 7.7.2017 ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்தது.

5. மேற்கூறிய அறிக்கையில் குழு அளித்துள்ள 28 பரிந்துரைகளில் 15 பரிந்துரைகள் துறையால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

6. 11 பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைகளை குழு ஏற்றுக்கொண்டுள்ளது. குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற பரிந்துரைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

7. இவ்வறிக்கையில் பாகம் 2–இல் தரப்பெற்றுள்ள காரணங்களுக்காக 2 பரிந்துரைகள் மீது துறை மேலும் நடவடிக்கை தொடர வேண்டுமென குழு முடிவு செய்துள்ளது. துறையால் மேலும் நடவடிக்கை தொடரப்பட வேண்டிய இனங்கள் இணைப்பு 3–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

8. 7.7.2017 அன்று நடைபெற்ற குழுக்கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு ஒப்புதல் அளித்தது.

சென்னை – 600 009,
நாள்: 7.7.2017
ஹேவிளம்பி ஆனி 23,
திருவள்ளுவர் ஆண்டு–2048.

பி.டீ.எம். நரசிம்மன்,
தலைவர்
மதிப்பீட்டுக் குழு

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## அறிக்கை

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு" குறித்து 2006–2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த பதினான்காவது அறிக்கையிலுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் அறிக்கை.

**1. பரிந்துரை எண்.2 பத்தி எண்.12**

அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் சிறப்பு உடற்பயிற்சிக்கூடம் அமைக்க விரைவில் கருத்துரு அனுப்பப்பட்டு உடற்பயிற்சிக்கூடம் அமைக்கப்பட வேண்டுமென்றும், இது குறித்து குழுவிற்கு அறிக்கை அளிக்கப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்திருந்தது.

**இதற்குத் துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது :–**

தமிழ்நாடு இளைஞர்களின் உடல்நலன் பேணும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளிலும் உடற்பயிற்சி கூடம் (ஜிம்னாசியம்) அமைக்கப்படும் என்றும், இதற்கான கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு உடற்பயிற்சிக் கருவிகள் அரசால் வழங்கப்படும் என்று, 2008–2009 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு, அதற்கான 2008–2009 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் ரூ.2.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 234 சட்டமன்ற தொகுதிகளில், முதற்கட்டமாக 117 சட்டமன்றத் தொகுதிகளில் ரூ.2.34 கோடிக்கு மிகாத செலவில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேற்படி திட்டம் திருத்தப்பட்டு தற்போது அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களிலும் உடற்பயிற்சி கூடம் நிறுவுதல் என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையாக அரசாணை (நிலை) எண்.7, இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுத் துறை, நாள் 17.1.2014–ன் மூலம் ரூ.405.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து முதற்கட்டமாக சென்னை, மதுரை, திருவண்ணாமலை, கன்னியாகுமரி, விருதுநகர், கடலூர், தஞ்சாவூர், தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ரூ.161.04 இலட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சிக் கூடங்கள் நிறுவும் பொருட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பொதுப் பணித்துறையின் மூலம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவு பெற்றுள்ளன.

மேற்படி மையங்களுக்குத் தேவையான உடற்பயிற்சி உபகரணங்கள் வாங்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 24.05.2016 அன்று வெளியிடப்பட்டது. 28.06.2015 அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் (Technical Bid) திறக்கப்பட்டன. பெறப்பட்ட தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளிக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. இவற்றுள் தகுதி பெறும் ஒப்பந்ததாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், நிதி ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) திறக்க நடவடிக்கை மேற்கொண்டு ஒப்புநோக்குப் பட்டியலின் அடிப்படையில் குறைந்த விலைப்புள்ளியாளர்களிடமிருந்து விளையாட்டு உபகரணங்கள் விரைவில் கொள்முதல் செய்து ஜனவரி 2017–க்குள் வழங்கப்படும்.

துறை தெரிவித்தது போல் விளையாட்டு உபகரணங்கள் குறைந்த விலைப்புள்ளியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படவேண்டும் என குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

**பரிந்துரை எண்.12 பத்தி எண்.40**

தேன்கனிக்கோட்டையில் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி விரைந்து முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவேண்டும் எனவும் பணிகள் முடிக்கப்பட்டது குறித்து குழுவிற்கு அறிக்கை அளிக்கப்பட வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்திருந்தது.

**இதற்குத் துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது :–**

2004–2005 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் 10 தாலுக்காக்களில் திறந்தவெளி விளையாட்டரங்கம் பிரிவு 2 (சிறு விளையாட்டரங்கம்) ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில், விளையாட்டரங்கம் ஒன்றிற்கு ரூ.30.00 இலட்சம் வீதம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இதில் மத்திய அரசின் பங்காக 50 விழுக்காடும், மாநில அரசின் பங்காக 25 விழுக்காடும், ஆக மொத்தம் ரூ.22.50 இலட்சம், மீதமுள்ள 25 விழுக்காட்டிற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ள விளையாட்டரங்கக் குழு மூலம் நன்கொடை திரட்டவும் தெரிவிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் தேன்கனிக்கோட்டை தாலுக்காவில் அரசுக்குப்பம் கிராமத்தில் 5.00 ஏக்கர் நிலம் தேர்வு செய்து அதில் திறந்தவெளி விளையாட்டரங்கம் பிரிவு 2 (சிறு விளையாட்டரங்கம்) அமைக்க முன் – நுழைவு அனுமதி வழங்கினார்கள். இதற்காக கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அலுவலருக்கு ரூ.22.50 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும், ரூ.7.50 இலட்சம் பொது மக்கள் நன்கொடை மூலம் திரட்டப்பட்டது.

மேற்படி இடத்தை பார்வையிட்ட கோயம்புத்தூர் மண்டல முதுநிலை மேலாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆகியோர் இந்த இடம் மலைப்பாங்கான இடமாக உள்ளதென்றும், அதனை சமன்செய்ய கட்டிட மையம் இதுவரை ரூ.12.50 இலட்சம் செலவிட்டதாகத் தெரிவித்தனர். மேலும், சம்பந்தப்பட்ட இடம் தேன்கனிக்கோட்டை பஸ் நிலையத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தள்ளி உள்ளதாகவும், மலைப்பாங்கான இடத்தை சமன்செய்து தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் அமைக்க மேலும் கூடுதல் செலவினம் ஆகும் எனவும் தெரிவித்து கட்டுமானப் பணியை நிறுத்தவும், சிறு விளையாட்டரங்கம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட தொகையினை மீளத் திரும்பப்பெறவும் ஆலோசனை கூறியுள்ளனர்.

8.7.2010 மற்றும் 9.7.2010 ஆகிய தேதிகளில் உறுப்பினர் செயலர் அவர்கள் மேற்படி இடத்தை மாவட்ட ஆட்சியருடன் சென்று ஆய்வு செய்தார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவி செயற்பொறியாளர் (கட்டிடம்) மற்றும் மேலாளர் 1 ஆகியோர் மேற்படி இடத்தை 16.7.2010 அன்று ஆய்வு செய்து கட்டுமானப் பணியை நிறுத்தம் செய்ய பரிந்துரைத்தனர்.

இப்பொருள் 1.11.2010 அன்று நடைபெற்ற செயலாண்மைக் குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் கட்டுமானப் பணிகளை தொடரவேண்டிய அவசியம் இல்லை எனவும், இதுவரை ஏற்படுத்தப்பட்ட வசதிகளை விளையாட்டு தளங்கள் அமைக்க பயன்படுத்திக் கொள்வதெனவும், மீதத் தொகையினை திருப்பி அனுப்புமாறு மாவட்ட ஆட்சியரை கோர வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. இதுவரை ரூ.3,68,000/– மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மீதத் தொகையினை அனுப்ப கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் மீதமுள்ள தொகை ரூ.18,82,000/– அனுப்பக் கோரி மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணகிரி அவர்களுக்கு நேர்முகக் கடிதங்கள் நாள் 16.03.2012, 25.07.2013, 14.08.2015, 17.10.2015 மூலமாக மற்றும் கடித நாள் 08.08.2014 & 26.05.2015 கோரப்பட்டது. தேன்கனிக்கோட்டையில் சிறு விளையாட்டரங்கம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் செலவினம் போக மீதத் தொகையை திருப்பிச் செலுத்திட கோரி திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி அவர்களுக்கு 05.08.2016–இல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தேன்கனிக்கோட்டை தாலுக்காவில் அரசுக்குப்பம் கிராமத்தில் 5.00 ஏக்கர் நிலத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்ட இடத்தினை துறை சரியான முறையில் ஆய்வு செய்யவில்லை (Feasibility study has not been made) என்றும், அவ்வாறு முறையான தொழில் நுட்ப ரீதியில் ஆய்வு செய்திருந்தால் அவசியம் இல்லாமல் ரூ.12.50 இலட்சம் அரசு பணம் செலவு செய்யப்பட்டுள்ளதை தவிர்த்திருக்கலாம் என குழு கருதுகிறது. செலவிடப்படாத மீத தொகை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்று துறை அரசு கணக்கில் செலுத்த வேண்டும் என்பது குழுவின் கருத்தாகும். மேலும், திட்டம் முழுமையாக முடிவடையாமலும், மீத தொகை அரசு கணக்கில் இது வரை செலுத்தப்படாதது குறித்து குழு

தனது வருத்தத்தினை தெரிவித்துக் கொள்கிறது. எனவே, துறை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து மீத தொகையினை பெற்று அரசு கணக்கில் செலுத்த வேண்டும் என்றும், இதில் சம்மந்தப்பட்டவர்களின் மீது துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும், தெரிவிக்கப்பட வேண்டும் என்பது குழுவின் கருத்தாகும்.

பொது மக்களிடமிருந்து எந்த நோக்கத்திற்காக நன்கொடையாக ரூ.7.50 இலட்சம் தொகை பெறப்பட்டதோ அந்த நோக்கமும் நிறைவேறாமலும், பெறப்பட்ட தொகையும் பயன் இல்லாமலும் உள்ளதாகவே குழு கருதுகிறது. அத்தொகை குறித்த தகவல் எதனையும் துறையின் பதிலில் குறிப்பிடப்படவில்லை. எனவே அது குறித்த தகவல் முழுமையாக குழுவிற்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

சென்னை – 600 009,
நாள்: 7.7.2017
ஹேவிளம்பி ஆனி 23,
திருவள்ளுவர் ஆண்டு–2048.

பி.எம். நரசிம்மன்,
தலைவர்
மதிப்பீட்டுக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

# இணைப்பு–I

துறையால் நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள்

சட்டமன்றப் பேரவை தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## இணைப்பு – 1

## துறையால் நிறைவேற்றப் பெற்றதாக கருதப்பெற்ற பரிந்துரைகள்

| வரிசை எண். (1) | பரிந்துரை எண். (2) | பத்தி எண். (3) | பரிந்துரையின் சுருக்கம் (4) |
|---|---|---|---|
| 1 | 5 | 22 | தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்கும்பொழுது அவர்கள் கடுமையான பயிற்சியை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் அது போன்ற தருணங்களில் அவர்களின் கல்வி பாதிக்கப்படாமலிருக்க அவர்களுக்கு தனியே பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் (5) | குழுவின் குறிப்புரை (6) |
|---|---|
| மாணவர்களுக்கு நன்கு பயிற்சியளித்து அவர்களை தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க நடவடிக்கைகள் எடுக்கும்போது அவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க மாணவர்களுக்கு கீழ்கண்டவாறு பயிற்சி அளிக்கப்படுகிறது:-<br><br>1. பள்ளி விடுமுறை நாட்களிலும் விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள செல்வதால் அவ்வகுப்பு ஆசிரியர் மூலம் கூடுதல் நேரத்தில் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது.<br><br>2. பள்ளி மாணவர்கள் மாநில மற்றும் தேசிய அளவில் போட்டிகளில் பங்கேற்க செல்லும் பட்சத்தில் அப்போட்டியாளர்களுக்கு பினனர் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகிறது. மேலும் காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வு நடக்கும் நாட்களில் பள்ளி மாணவர்கள் மாநில மற்றும் தேசிய அளவில் போட்டிகளில் பங்கு பெற்று திரும்பும் பட்சத்தில் அவர்களுக்கென தனித்தேர்வு நடத்தபபட்டு வருகிறது. அத்துடன் மேற்படி போட்டிகளில் பங்கு பெறும் நாட்கள் பள்ளி வருகை நாட்களாக கருதப்படுகிறது.<br><br>3. மேலும், பள்ளியில் பயிலும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கென பொறியியல் கல்லூரி, இளங்கலை மற்றும் முதுகலை பட்ட படிப்புகளில் குறிப்பிட்ட இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது.<br><br>4. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 2015–16 ஆம் ஆண்டில் 28 விளையாட்டு விடுதிகள் 1969 மாணவ, மாணவியர்களுடன் இயங்கி வருகின்றன.<br>இவர்களின் கல்வி பாதிக்கப்படாத வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். (1) | பரிந்துரை எண். (2) | பத்தி எண். (3) | பரிந்துரையின் சுருக்கம் (4) | துறையின் பதில் (5) | குழுவின் குறிப்புரை (6) |
|---|---|---|---|---|---|
| 2 | 7 | 26 | 64 கல்வி மாவட்டங்களிலும் 5 நாள் பயிற்சி முகாம் நடத்தப்படுவது குறித்து அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட வேண்டுமென்றும் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை குழுவிற்குத் தெரிவிக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. | உலக திறனாளர்களை கண்டறியும் திட்டத்தின் கீழ் 64 (தற்போது 67) கல்வி மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும், அந்தந்த முதன்மை கல்வி அலுவலர்கள், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் மற்றும் மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் மூலம் சுற்றறிக்கை அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அனுப்பப்பட்டு அதன் மூலம் மாணவ, மாணவிகள் கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் பங்கேற்கின்றனர். கல்வி மாவட்ட அளவிலான 5 நாள் பயிற்சி முகாம் கடந்த ஆண்டு 64 (தற்போது 67) கல்வி மாவட்டங்களிலும் கோடை விடுமுறையான ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்டது. ஒரு கல்வி மாவட்டத்திற்கு ரூ.8,500/– வீதம் ரூ.5,44,000/– வழங்கப்படுகிறது. மேலும், 5 நாள் பயிற்சி முகாமில் திறமையானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சீருடையுடன், உணவு மற்றும் தங்கும் இடவசதியுடன் 15 நாள் இருப்பிட பயிற்சி முகாம் மே மாதத்தில் நடத்தப்படுகிறது. 32 மாவட்டங்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.30,00,000/– ல் இருப்பிட பயிற்சி முகாமிற்காக செலவிடப்படுகிறது. (அரசாணை (நிலை) எண்.34, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 2.5.2013). | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| வரிசை எண். (1) | பரிந்துரை எண். (2) | பத்தி எண். (3) | பரிந்துரையின் சுருக்கம் (4) |
|---|---|---|---|
| 3 | 8 | 29 | தேசிய போட்டியில் பங்கேற்கும் தமிழக வீரர்களுக்கு குறைந்தது 20 நாட்களுக்காவது உறைவிடப் பயிற்சியளித்து அவர்கள் அதிகப் போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் இது தொடர்பான செலவினங்களுக்கு அரசின் நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் (5) | குழுவின் குறிப்புரை (6) |
|---|---|
| அரசாணை (நிலை) எண்.48, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 03.08.2012–ன்படி தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் தமிழக அணி பங்குகொள்ள மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு வழங்கிடும் பொருட்டு ரூ.35.00 இலட்சம் மான்யம் பெறப்பட்டுள்ளது.<br><br>29.08.2008 அன்று நடைபெற்ற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய செயலாண்மை குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி தேசிய போட்டிகளில் பங்குபெற தேர்வு செய்யப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு கீழ்கண்ட விவரப்படி மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.<br><br>1. இருவழி பயணக் கட்டணம் (சலுகை அடிப்படையிலான இரயில் கட்டணம் )<br>2. பயணகால தினப்படி ரூ.100/– (ஒரு நபருக்கு)<br>3. மருத்துவ மற்றும் பயணச் செலவு ரூ.50/– (ஒரு நபருக்கு)<br>4. விளையாட்டுச் சீருடைகள் செலவினம் ரூ.1,500/– (ஒரு நபருக்கு)<br>5. பயிற்சி காலங்களுக்கான தினப்படி ரூ.60/– (ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு) அதிகபட்சமாக 10 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. கூடுதல் நாட்களுக்கான தினப்படி உரிய விளையாட்டு சங்கங்கள் ஏற்றுக் கொள்கின்றன. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். (1) | பரிந்துரை எண். (2) | பத்தி எண். (3) | பரிந்துரையின் சுருக்கம் (4) | துறையின் பதில் (5) | குழுவின் குறிப்புரை (6) |
|---|---|---|---|---|---|
| 4 | 14 | 47 | திருச்சி, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பல்நோக்கு விளையாட்டு அரங்கம் இந்த நிதியாண்டிற்குள் கட்டப்பட்டு இது குறித்து அறிக்கை குழுவிற்கு அளிக்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் (wooden court) மரத்தினாலான தரைத் தளம் கொண்ட உள்விளையாட்டு அரங்கம் ரூ.1200.00 இலட்சத்தில் அமைக்கப்பட்டு 09.11.2009 அன்று திறந்து வைக்கப்பட்டு விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிலும் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிலும் உள்ளது.<br><br>தருமபுரி மாவட்டத்தில் உள் விளையாட்டரங்கம் (Wooden court) மரத்தினாலான நான்கு இறகுப்பந்து மைதானமும் ஒரு மரத்தினாலான இறகுப்பந்து தளமும் தனியாக அமைக்கப்பட்டு, மேலும், Gymnasium hall (indoor) ரூ.100.02 இலட்சத்தில் அமைக்கப்பட்டு 06.12.2010 அன்று திறந்து வைக்கப்பட்டு விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிலும் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிலும் உள்ளது.<br><br>திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மத்திய மற்றும் மாநில அரசின் நிதியில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் ரூ.256.28 இலட்சத்தில் அமைக்கப்பட்டு 04.03.2016 அன்று திறந்து வைக்கப்பட்டு விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிலும் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிலும் உள்ளது.<br><br>மேற்கூறிய உள்விளையாட்டரங்களில் இறகுப்பந்து, கபாடி, வாள்சண்டை, டேக்வேன்டோ, ஜூடோ, செஸ், கேரம், மேசைப்பந்து, டென்னிகாய்ட் போன்ற விளையாட்டுக்கள் விளையாட இயலும். | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் | | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | | |
| 5 | 15 | 50 | திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை தாலுக்காவில் நடப்பு நிதியாண்டிலேயே சிறிய விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. | | |
| | | | துறையின் பதில் | | குழுவின் குறிப்புரை |
| | | | (5) | | (6) |
| | | | 2005–2006 ஆம் நிதியாண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ்5 மாவட்ட தலைநகரங்களிலுள்ள தாலுக்காக்களில் மினி விளையாட்டரங்கம் அமைக்க அரசு அனுமதியளித்து அதற்குண்டான மான்யம் மற்றும் அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், மேலப் பாளையத்தில் மினி விளையாட்டரங்கம் அமைத்திட முடிவு செய்யப்பட்டது. இதற்காக அரசாணை (2டி) எண்.445, வருவாய்த் துறை, நாள் 28.7.2010–ல் முன் நுழைவு அனுமதியும், அரசாணை (நிலை) எண்.386, வருவாய்த் துறை, நாள் 17.8.2010–ல் மேலப்பாளையம் கிராமம் புல எண்.71–ல் 6.01 ஏக்கர் மிகை நிலத்தினை இலவசமாக ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது. மினி விளையாட்டரங்கம் கட்டுவதற்கு அரசு மான்யம் ரூ.22.50 இலட்சமும், மாணபுமிகு முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.17.50 இலட்சம் வழங்கப்பட்டு மொத்தம் ரூ.40.00 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. | | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 6 | 16 | 53 | சேலம் மாவட்டத்தில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது குறித்து அறிக்கை அளிக்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|
| (5) | (6) |
| சேலம் மாவட்டத்தில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, தற்பொழுது நன்கு பராமரிக்கப்பட்டு விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 7 | 17 | 56 | நலிந்த நிலையிலுள்ள முன்னாள் விளையாட்டு வீரர்களின் மாத ஓய்வூதியத்தை ரூ.500/–லிருந்து உயர்த்துவதற்கு கருத்துரு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|
| (5) | (6) |
| நலிந்த நிலையிலுள்ள முன்னாள் விளையாட்டு வீரர்களின் மாத ஓய்வூதியம் ரூ.500/– லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தி அரசாணை (நிலை) எண்.33, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 12.06.2008–ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.<br><br>மேலும் அரசாணை (நிலை) எண்.42, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 21.12.2011–ன் மூலம் மாத ஓய்வூதியமான ரூ.1,000/– லிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது மாத ஓய்வூதியமாக ரூ.3,000/– 91 நபர்கள் பெற்று வருகிறார்கள். | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். (1) | பரிந்துரை எண். (2) | பத்தி எண். (3) | பரிந்துரையின் சுருக்கம் (4) |
|---|---|---|---|
| 8 | 18 | 58 | காஞ்சிபுரம் மாவட்டத்தில் கட்டப்பட்டு வரும் இறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கப் பணிகள் முடிக்கப்பட்டு விளையாட்டரங்கம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது குறித்து குழுவிற்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் இது குறித்த அறிக்கை குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் (5) | குழுவின் குறிப்புரை (6) |
|---|---|
| காஞ்சிபுரம் மாவட்டம், இறகுப்பந்து உள் விளையாட்டரங்க பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். (1) | பரிந்துரை எண். (2) | பத்தி எண். (3) | பரிந்துரையின் சுருக்கம் (4) |
|---|---|---|---|
| 9 | 20 | 65 | திருவள்ளூர் மாவட்டம் பெருந்திட்ட வளாகத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிகள் முடிக்கப் பெற்றது குறித்து குழுவிற்கு தெரிவிக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் (5) | குழுவின் குறிப்புரை (6) |
|---|---|
| திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில் ரூ.56.00 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டுவதற்கு 2004-2005 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் அரசு அனுமதியளித்து ரூ.42.00 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. தற்போது, ரூ.132.00 இலட்சம் செலவில் கட்டுமானப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டு 12.06.2014 அன்று திறக்கப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 10 | 21 | 67 | திருவள்ளூர் மாவட்டம் முகப்பேரில் உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு போதுமான நிதியைப் பெற்று நடப்பு நிதியாண்டிலேயே இப்பணிகளை முடிக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|
| (5) | (6) |
| திருவள்ளூர் மாவட்டம், முகப்பேரில் ரூ.144.29 இலட்சம் மதிப்பீட்டில் இறகுப்பந்து மைதானம் வசதியுடன் கூடிய பல்நோக்கு உள் விளையாட்டரங்க கட்டுமானப் பணிகள் முடிவுற்று திறப்பிற்கு தயார் நிலையில் உள்ளது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 11 | 22 | 69 | திருவண்ணாமலையில் நீச்சல் குளம் கட்டுவதற்கான பணிகளுக்கு போதுமான நிதியைப் பெற்று நடப்பு நிதியாண்டிற்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டுமெனவும் இது குறித்து குழுவிற்கு அறிக்கை அளிக்கப்பட வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|
| (5) | (6) |
| 2007–2008 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டில் நீச்சல் குளம் அமைக்க அனுமதியளித்து அரசு மான்யம் ரூ.33.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. மாவட்ட விளையாட்டு வளாகத்தில் அமைக்கப்பட்ட நீச்சல்குளத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து 10.5.2009 முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். (1) | பரிந்துரை எண். (2) | பத்தி எண். (3) | பரிந்துரையின் சுருக்கம் (4) | துறையின் பதில் (5) | குழுவின் குறிப்புரை (6) |
|---|---|---|---|---|---|
| 12 | 24 | 71 | சென்னையில் Sports Academy அமைப்பது மிகவும் அவசியம் என குழு கருதுவதால் இதற்கான தீவிர முயற்சிகளை துறை எடுக்க வேண்டும் எனவும் நடப்பு நிதியாண்டிலேயே இதற்கான நிதியாதாரங்களைப் பெற்று பணிகள் தொடங்கப்பட வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது. | தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் கீழ்காணும் விளையாட்டு அகாடமிகள் மாவட்டங்களில் நிறுவப்பட்டு நல்ல முறையில் பயன்பாட்டில் உள்ளது.<br><br>1. Sprint and Jump Academy, SDAT, Madurai<br>2. Hockey Academy for Boys & Girls, Mayor Radhakrishnan Stadium, Chennai<br>3. Diving Academy for Boys and Girls, Aquatic Complex, Chennai<br>4. Middle Long Distance – Tiruvannamalai<br>5. Football Academy for Boys – Nagapattinam<br>6. Football Academy for Girls – Sivagangai<br>7. Throws Academy – Dindigul<br><br>சென்னையில் தற்போது கீழ்க்காணும் Sports Academy நிறுவப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பது தெரிவிக்கப்படுகிறது.<br><br>1. Sprint and Jump Academy, SDAT, Madurai<br>2. Hockey Academy for Boys & Girls, Mayor Radhakrishnan Stadium, Chennai<br>3. Diving Academy for Boys and Girls, Aquatic Complex, Chennai<br><br>மேலும், ஆண், பெண் இருபாலருக்கும் Centre of Excellence மற்றும் Sports Hostel of Excellence ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கம் மற்றும் வெளி விளையாட்டரங்கங்களில் செயல்படுகிறது. மேலும், சென்னையில் Cricket விடுதி ஆரப் பள்ளி அசோக் நகரிலும், ஒய்.எம்.சி.ஏ. கல்லூரியிலும், மகளிருக்கென கைப்பந்து மற்றும் டென்னிஸ் விடுதி நேரு உள்விளையாட்டரங்கத்திலும் செயல்பட்டு வருகின்றது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் | துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 13 | 25 | 37 | சென்னை, சென்னாய் நகரில் இறகு பந்து உள்விளையாட்டரங்கம் கட்டுவதற்கான பணிகளுக்கு போதுமான நிதியைப் பெற்று நடப்பு நிதியாண்டிற்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டுமெனவும், இது குறித்து குழுவிற்கு அறிக்கை அளிக்கப்பட வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது. | சென்னையில் இரண்டு இடங்களிலும் மற்றும் காஞ்சிபுரத்தில் ஒரு இடத்திலும் இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம் அமைக்க ரூ.55.00 இலட்சத்தில் 2006–2007 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை (நிலை) எண்.40, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 5.9.2006–ல் ஆணை வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணைக்கிணங்க சென்னையில் இரண்டு இடங்களில் அதாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி கிராமத்திலும் மற்றும் சென்னை சென்னாய்நகர் நீச்சல் குள வளாகத்திலும் தலா ரூ.20.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.40.00 இலட்சம் செலவில் இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.<br><br>அதன்படி, சென்னை சென்னாய்நகர் நீச்சல் குள வளாகத்தில் மேற்படி இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம் ரூ.29.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு 10.12.2010 முதல் பொது மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 14 | 26 | 39 | எனவே, சென்னை, சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தியுள்ள நிலையிலும் இந்நீச்சல் குளத்தில் சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நல்ல நீரை வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|
| (5) | (6) |
| சென்னை, சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தியுள்ள நிலையிலும் இந்நீச்சல் குளத்தில் சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நல்ல நீரை வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 15 | 27 | 40 | சென்னை, சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நல்ல நீரை வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|
| (5) | (6) |
| சென்னை, சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தியுள்ள நிலையிலும் இந்நீச்சல் குளத்தில் சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நல்ல நீரை வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. | நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது. |

/copy of/

இணைப்பு - 1
(வரிசை எண். 7, பரிந்துரை எண். 7)

**Abstract**

Sports – Pension for the outstanding sports persons who are in indigent condition – Enhancement of pension and monthly income ceiling – Sanction - Orders - Issued.

**YOUTH WELFARE AND SPORTS DEVELOPMENT (S1) DEPARTMENT**

**G.O. Ms. No.42**

**Dated : 21.12.2011**
மார்கழி – 5
திருவள்ளுவர் ஆண்டு 2042

**READ:**

1. G.O.Ms.No.33, Youth Welfare and Sports Development Department, Dated 12.06.2008.
2. G.O.(1D) No.27, Youth Welfare and Sports Development Department, Dated 28.08.2008.

**ALSO READ:**

From the Member Secretary, Sports Development Authority of Tamil Nadu, Chennai-84 D.O. Letter No.8958/YI-1/2011, dated 28.07.2011 and 02.12.2011.

****

**ORDER:**

The Government of Tamil Nadu in G.O.Ms.No.832, Education, dated 08.05.1978 has approved the sanction of financial assistance of Rs.75/- per month to the Outstanding Sportsmen / Women, who were living in indigent circumstances. Under this scheme, the sportsmen / women, who attained the age of 58 years and with monthly income not exceeding Rs.150/- were eligible to receive the financial assistance. Subsequently, the Government in G.O.Ms.No.96, Education, dated 11.02.1994, had enhanced the monthly pension to the outstanding sportsmen / women from Rs.75/- to Rs.500/- per month and also enhanced the income ceiling amount from Rs.150/- to Rs.500/- per month.

Further, the Government had raised the monthly income ceiling from Rs.500/- to Rs.2,000/- in G.O.Ms.No.41, Youth Welfare and Sports Development Department, dated 23.07.2002 based on the Sports Development Authority of Tamil Nadu Executive Committee's Resolution and the Government enhanced the monthly pension for sports persons who are in indigent condition from Rs.500/- to Rs.1000/- in the G.O. first read above.

2. As on date 58 indigent sports persons and 5 family pensioners are getting family pension under this scheme. Now, due to the escalation of cost of living in the day to day life, it is essential to enhance the pension for the outstanding sports persons in indigent circumstances.

3. In this connection, the Member Secretary, Sports Development Authority of Tamil Nadu has requested the Government to enhance the pension, for the outstanding sports persons who are in indigent condition, from Rs.1000/- to Rs.3000/- and also the monthly income ceiling for

pensioners from Rs.2000/- to Rs.6000/- as approved by the Hon'ble Chief Minister in review meeting and also based on the Announcement made by Hon'ble Minister (School Education, Sports and Youth Welfare).

4. Government, after careful consideration enhance the pension for the outstanding sport persons who are in indigent condition from Rs.1000/- to Rs.3000/- (Rupees three thousand only) and the monthly income ceiling for pensioners from Rs.2000/- to Rs.6000/- (Rupees six thousand only) with immediate effect.

5. The above expenditure shall be debited to the following head of account:

"2204 00 Sports and Youth Services - 104 Sports and Games - I. Non-plan-AD Financial assistance to eminent sportsmen - 27 Pensions - 09 Others."(DPC 2204 00 104 AD 2799)

6. Necessary additional funds will be provided in RE/FMA 2011-2012. Pending provision of such, the Member Secretary, Sports Development Authority of Tamil Nadu is authorized to incur the expenditure at revised rate. However the additional expenditure will be brought to the notice of the Legislature by a specific inclusion in the Supplementary Estimate.

7. The Member Secretary, Sports Development Authority of Tamil Nadu shall include the additional expenditure while sending proposals to Finance (Edn-I) Department and submit necessary supplementary notes to Finance (BG-I) Department to include this expenditure in the Supplementary Estimates for 2011-2012.

8. This order issues with the concurrence of Finance Department vide its U.O.No. 315/DS (KM)/11, dated 20.12.2011 and additional sanction ledger No.1170 (One Thousand One Hundred and Seventy).

**(BY ORDER OF THE GOVERNOR)**

**G.A.RAJKUMAR**
**ADDL. CHIEF SECRETARY TO GOVERNMENT**


**To**

The Member Secretary, Sports Development Authority of Tamil Nadu, Chennai-84.

The Accountant General, Tamil Nadu, Chennai-18.
The Resident Audit Officer, Accountant General (CAS), Chennai-9.
The Pay and Accounts Officer, Chennai-9.
The Fin (Edn-I/BG-I/BG-II) Department, Chennai-9.
The Chief Minister's Office, Chennai-9.
The Senior Personal Assistant to Minister (School Education, Sports and Youth Welfare, Law, Courts and Prisons), Chennai-9.
The Under Secretary to Government,
Youth Welfare and Sports Development Department, Chennai-9.
The Private Secretary to Additional Chief Secretary to Government,
Youth Welfare and Sports Development Department, Chennai-9.

**//Forwarded/By order//**

**SECTION OFFICER**



# இணைப்பு–II

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றவை

## இணைப்பு – 2

### பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றதாக கருதப்பெற்றவை

| வரிசை எண். (1) | பரிந்துரை எண். (2) | பத்தி எண். (3) | பரிந்துரையின் சுருக்கம் (4) |
|---|---|---|---|
| 1 | 1 | 9 | விளையாட்டு மைதானங்கள் இதுவரை அமைக்கப்படாத ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை கண்டறிந்து அங்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு முன்னுரிமை கொடுத்து, இது தொடர்பாக சம்மந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் (5) | குழுவின் குறிப்புரை (6) |
|---|---|
| 2008–2009 ஆம் ஆண்டு முதல் மத்திய, மாநில அரசு திட்டமான கிராம இளைஞர் மேம்பாட்டு விளையாட்டு திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 10 விழுக்காடுகளான 1261 கிராம ஊராட்சிகளையும் 38 ஊராட்சி ஒன்றியங்களையும் தேர்ந்தெடுத்து மாணவ / மாணவியர்கள் பயன்பெற விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டன. (அரசாணை (நிலை) எண்.35, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 7.12.2011) (அரசாணை இணைக்கப்பட்டுள்ளது). மேலும், இதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் 1,261 கிராம ஊராட்சிகளிலும் 38 ஊராட்சி ஒன்றியங்களிலும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு, விளையாட்டு உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது எனவும் இதற்கான பயன்பாட்டுச் சான்று மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.<br><br>மேலும், இத்திட்டத்தின் மூலம் தொடர்ந்து விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் மத்திய அரசால் செயல்படுத்தாத காரணங்களினால் மீதமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டு மைதானங்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.<br><br>மேலும், இதனைத் தொடர்ந்து 01.04.2014 முதல் இத்திட்டத்தின் பெயரை மாற்றி ராஜீவ்காந்தி கேல் அபியான் என்ற பெயரில் ஊராட்சி ஒன்றிய தலைமையிடங்களில் வெளி விளையாட்டரங்கம் மற்றும் உள் விளையாட்டரங்கம் நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக 5 ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டு மைதானங்கள் அமைத்திட 28.01.2016 அன்று அரசு முதன்மைச் செயலர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநில அளவிலான செயற்குழுக் கூட்டத்தின் (State Level Executive Committee) ஒப்புதலுடன் அரசு மூலமாக மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டதில், தேனி மாவட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் ரூ.80.00 லட்சம் செலவில் உள்விளையாட்டு அரங்கம் அமைத்திட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.<br><br>மேலும், 2016–17 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தினை கேலோ இந்தியா எனும் பெயரில் மாற்றி செயல்படுத்தப்படவுள்ளது என்ற விவரம் மட்டும் பெறப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவது தொடர்பான முழுமையான விவரங்கள் ஏதும் மத்திய அரசிடமிருந்து இதுகாறும் பெறப்படவில்லை. | துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் | துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 2 | 3 | 16 | தேசிய அளவில் நடைபெறும் போட்டிக்களில் தமிழக வீரர்கள் அதிக பதக்கங்களை பெறுவதற்கு தேவையான திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. | உலக திறனாய்வுத் திட்டத்தின் மூலம் (Battery Test) தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் தேர்வு நடத்தி அதில் சிறந்த வீரர்களை கண்டறிந்து அவர்களுக்கு தினப் பயிற்சி, வாராந்திர பயிற்சிகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்.130, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20.8.2002.)<br><br>தமிழகம் முழுவதும் 28 விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு விளையாட்டு வீரர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்கள் தேசிய அளவில் பங்கேற்று வெற்றியடைய ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறார்கள். தேசிய அளவில் வெற்றி பெறும் வீரர் / வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. தேசிய அளவிலான போட்டிகளில் வீரர் / வீராங்கனைகள் பங்கேற்பதற்கு மாநில கழகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து ஊக்கப்படுத்தப்படுகிறது.<br>மேலும் பள்ளிகளில் பயிலும் இளம் சிறுவர்களது விளையாட்டுத் திறனை ஊக்குவித்திடும் வகையில் அவர்களது விளையாட்டு சாதனைக்கு ஏற்ப மாதம் ரூ.500/– வீதம் வருடத்திற்கு ரூ.6,000/– சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மொத்த தொகை ரூ.1.944 கோடி (அரசாணை (நிலை) எண்.12, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 10.02.2012.) | துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 3 | 4 | 19 | இனி வரும் காலங்களில் தமிழக வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்வதற்குத் தேவையான உறுதியான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டுமெனவும் சர்வதேச அளவில் ஆய்வுகளை மேற்கொண்டு திட்டமிடல் அவசியம் என்றும் இது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|
| (5) | (6) |
| தமிழகத்தில் தலைசிறந்த 5 வீரர் / வீராங்கனைகளை தேர்வு செய்து அவர்களுக்கு ஆண்டுக்கு தலா ரூ.25.00 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு பயிற்சி கொடுக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது 5 வீரர் / வீராங்கனைகள் உயர்மட்ட குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு கடந்த 16.4.2013 முதல் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகிறார்கள். (அரசாணை (நிலை) எண்.4, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 13.01.2012.)<br><br>மேலும், இத்திட்டத்தின் கீழ் செல்வி ஐஸ்வர்யா நெடுஞ்செழியன் என்பவர் ஆசிய அளவிலான பாய்மர கப்பலோட்டி போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். மேலும், பவானி தேவி, வாள் சண்டை வீராங்கனையும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். | துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. |



| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 4 | 6 | 24 | மாணவர்களுக்கு நன்கு பயிற்சியளித்து அவர்களை தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க நடவடிக்கைகள் எடுக்கும்போது அவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க இது குறித்து கல்வித் துறையுடன் கலந்தாலோசித்து தகுந்த திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. |

| துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|
| (5) | (6) |
| விளையாட்டு விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ / மாணவிகளுக்கு காலை, மாலை பள்ளி நேரம் தவிர்த்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தேர்வு நடைபெறும் போதும் மாணவ / மாணவிகள் மாநில, தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டால் அவர்கள் போட்டிகள் முடிந்து வந்தபின் படிப்பதற்கு நேரம் ஒதுக்கப்பட்டு கல்வித் துறையுடன் கலந்து ஆலோசித்து மறு தேர்வு நடத்தப்பட்டு வருகிறது.<br><br>இதனால் விளையாட்டு விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவ / மாணவிகளின் கல்வி பாதிக்கப்படுவதில்லை. | துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. |

| வரிசை எண். (1) | பரிந்துரை எண். (2) | பத்தி எண். (3) | பரிந்துரையின் சுருக்கம் (4) | துறையின் பதில் (5) | குழுவின் குறிப்புரை (6) |
|---|---|---|---|---|---|
| 5 | 9 | 32 | தமிழகத்தில் சர்வதேச அளவில் இறகுப்பந்து போட்டிகளை நடத்துவதற்கு தேவையான முயற்சிகளை துறை எடுக்க வேண்டுமென்றும் இதற்குத் தேவையான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. | தமிழகத்தில் சர்வதேச அளவிலான இறகுப்பந்து விளையாட்டுப் போட்டியினை நடத்திட இந்திய ஒலிம்பிக் கழகம் / இந்திய இறகுப்பந்து சம்மேளனம் ஒதுக்கீடு பெற்றுத்தர வேண்டும். அவ்வாறு, சர்வதேச இறகுப்பந்து போட்டிகளை தமிழகத்தில் நடத்திட ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில், இத்துறை மூலம் சர்வதேச போட்டிகள் நடத்திட தேவையான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கலாகிறது.<br><br>மேலும், தற்போது தேசிய அளவிலான இறகுப்பந்து விளையாட்டுப் போட்டிகள் RGKA திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டு வருகிறது என்றும் இதில் தமிழக அணி கலந்து கொண்டு பதக்கங்கள் பெற்று வருகின்றன என்பதையும் இதன் மூலம் தெரிவிக்கலாகிறது.<br><br>மேலும், 2012–13 ஆம் ஆண்டு முதல் மாநில அளவிலான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான இறகுப்பந்து விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. | துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. |

| வரிசை எண். | பரிந்துரை எண். | பத்தி எண். | பரிந்துரையின் சுருக்கம் | துறையின் பதில் | குழுவின் குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | (4) | (5) | (6) |
| 6 | 10 | 35 | கால்பந்தாட்டத்தை தவிர மற்ற விளையாட்டுகளுக்கும் பயிற்சியாளர்கள் உடனடியாக நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. | தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பணிபுரிந்து வரும் 118 பயிற்றுநர்களில், 16 பயிற்றுநர்கள் மட்டுமே கால்பந்து பயிற்றுநர்கள். மீதம் உள்ள 102 பயிற்றுநர்களுக்கும் பல்வேறு விளையாட்டுப் பிரிவு பயிற்றுநர்கள் ஆவர். | துறையின் பதில் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. |

